# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை



11—6—72

★

உள்ளே......

இந்திய துணைக்கண்ட
விடுதலையும்
அறிஞர் அண்ணாவும்
(சிறப்புக் கட்டுரை)

★

எண்சுவைக் கலிங்கம்
(இலக்கியம்)

★

இலக்கணம்
(மொழிக் கட்டுரை)

★

ஆற்றுப் பாலம்!
(சிறுகதை)


விலை 25 காசு



பாதுகாப்பு நிதிக்கு தமிழ் நாட்டில் திரட்டப்பட்ட ரூ. 6 கோடியை தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளிப் பேழையில் வைத்து, பிரதமர் இந்திரா காந்தியிடம் முதலமைச்சர் கருணாநிதி கொடுத்தார்.

# 'கரு'விலே 'திரு'வுடையான்!

"காவிரி தந்த தமிழகத்துப் புது மணலிற் களம் அமைத்துச் சேர சோழப் பாண்டி மன்னர் கோபுரத்துக் கலசத்தின் யார் கொடிதான் பறப்பதென்று இன்று போல் போரிட்டுக் கொண்டிருந்த காலம் அது...!"

என்று தொடங்கும் புதிய புறநானூற்றைக் கேட்காதவர்கள் யாருமிருக்க முடியாது.

புரியாத புறநானூற்றுக்கு புது விளக்கம் தந்த முதல் கவிஞர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்.

இலக்கிய ஈடுபாட்டால் கவிஞராகி, அதன் வழி கலைஞராகி நாட்டின் முதல்வராக இருக்கும் அவருக்கு, தென் கடல் முதல் மேலைச் சாளுக்கிய நாடு வரை விரிந்து கிடந்த சோழசாம்ராஜ்யம் மனக் கண்முன் மீண்டும் மாளாப் புகழுடன் எழுந்து நின்றதில் வியப்பில்லை.

கவிஞன் ஒருவனுக்கு, காணாத ஒரு பொருளை தன் கற்பனையில் கண்டு மகிழ்வதும் அதை விரிவுபடுத்தி கவிதை வடிப்பதும் ஆகக் கூடிய ஒன்றுதான்!

வரலாற்றை மிக ஊன்றிப் படித்து, தன்னை அந்தச் சூழலுக்கு ஆளாக்கி இன்புறும் கவிஞர் ஒருவர் நல்வினைப் பயன் காரணமாக நாட்டின் முதல்வரானால் தான் வாழும் நாளும் அந்த நாட்களைப் போலாக்கி மாண்டு கிடக்கும் தமிழ் நாட்டின் சிறப்பை மீண்டும் நிலவிட வைக்க முனைவதில் வியப்பொன்றுமில்லை. அது விரும்பி வரவேற்க வேண்டிய முதல் அம்சமாகும். வேண்டாதார், விபரம் அறியாதார், வெறுப்பர். வேறு வேலையில்லை அவர்களுக்கு! விடுங்கள்!

சங்க காலத்திற்குப் பின் பல்வேறு இனத்தவரின் ஆளுகைக்குட்பட்ட தமிழகம் தன்புகழ் குன்றிக் கிடந்தது, மீண்டும் அது தன் புகழைப் புதுப்பித்துக் கொண்டது பிற்காலச் சோழர்களின் ஆட்சியில்தான்! வித்திட்டவன் விஜயாலய சோழன்! சோழ சாம்ராஜ்யம் தன் எல்லைகளை விரிவாக்கிக் கொண்டது சுந்தரச் சோழனின் இரண்டாவது செல்வன் ராஜகேசரி இராஜ சோழ தேவன்—என அழைக்கப்பட்ட அருண்மொழித் தேவன் காலத்தில்தான்!

இராஜ இராஜ சோழன் தன் ஆட்சிக் காலத்தில் வென்ற இடங்களின் பட்டியலைப் பார்த்தாலே அவன் வீரமும் தீரமும் கண்முன் நிற்கும்—

இராஜராஜன் பட்டம் கட்டியது கி.பி. 985. பட்டத்திற்கு வந்து 10 ஆண்டுகள் தன் ஆட்சியைப் பலப்படுத்தினான். சேரநாட்டின்மீது, தளகர்த்தனை கொத்த மண்டலமுடையானை அப்பிரமேயனுடன் காந்தளூர்த் துறைமுகத்தின் கண்ணுள்ள கலங்களை யறுத்தது 997.

வேங்கை நாடு, கங்கபாடி நுளம்பாடி, குடமலை நாடு, பாண்டி நாடு முதலியன கொண்டது 1005.

**P. S. P. சாமி, (திரைப்படக் கல்லூரி)**

தலைக் காட்டுக் கருகில் கலியூரில் தளகர்த்தன் கொத்தமண்டலமுடைய அப்பிரமேயன் போசள ராஜன் மந்திரியாகிய நாகண்ணனைத் தோற்கடித்து போசன வீரர்களாகிய மஞ்சகன், காலிகன், நாகவர்மன், என்பவர்களைக் கொன்று தானுமிறந்தது—1006.

இரட்டபாடி கைவசப்பட்டது 1009.

பன்னீராயிரம் பழந் தீவுகளைக் கொண்டது 1014.

வெற்றி மீது வெற்றியாகக் கொண்ட இக்கோணாட்டை ஒன்பது மண்டலங்களாகப் பிரித்தான் இராஜராஜன்.

1. மும்முடிச் சோழ மண்டலம் (கங்கபாடிக்குத் தெற்கு)
2. விக்ரம சோழமண்டலம் (பங்களூருக்கு வடமேற்கு)
3. நிகரிலி சோழமண்டலம் (சேலம் மாவட்டத்தின் வட பாகம் - இப்போதுள்ள தர்மபுரி மாவட்டம் உள்பட)
4. இரட்ட பாடி கொண்ட சோழ மண்டலம் (மைசூருக்கு வடக்கு)
5. விஜய ராஜேந்திர சோழ மண்டலம் (கோலார் மாவட்டம்)
6. ஜயங்கொண்ட சோழ மண்டலம் (தொண்டை நரடு)
7. ராஜராஜ மண்டலம் (பாண்டி நாடு)
8. அதிராஜராஜ மண்டலம் (சேலத்தின் தென் பாகமும் கோயமுத்தூர் அடங்கிய கொங்கு நாடு)
9. கங்கை கொண்ட சோழ மண்டலம் (வ'ட சர்க்காரில் ஒரு பகுதி)

—"கார் மண்டல சதகம்"



நில வரியைப் போக்கி நீர் வளத்தைப் பெருக்கி நாட்டைச் சீருடையதாக்கிச் சிறப்படையச் செய்த இச் சோழப் பேரரசன் 29 ஆண்டுகள் ஆட்சி செய்தான்.

1500ஆண்டுகள் தமிழர்வரலாற்றைப் பார்த்தால் மூன்று பேரரசுகள் இருந்ததைக் க ணலாம்,

பல்லவப் பேரரசு—சிம்ம விஷ்ணு காலத்தில் உதயமாகி அபராஜித பல்லவனோடு அழிந்தது. சுமார் 400 ஆண்டுகள் நிலைத்தது.

சோழப் பேரரசு—விஜயாலய சோழன் காலத்தில் உதித்து மூன்றாம் ராஜராஜனோடு முடிவடைந்தது. சுமார் 300 ஆண்டுகள் நிலைத்தது.

பாண்டியப் பேரரசு—மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலம் முதல் 100 ஆண்டுகள் நிலைத்தது. கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் சரிந்தது.

இதன் பிறகு தமிழ்நாட்டைப் பல்வேறு இனத்தவர் ஆட்சி செய்தனர். தமிழரின் பெருமை குன்றியது. தமிழரின் சிறப்பு சீரழிந்தது. களப்பிரர் கைபட்ட தமிழ் மணிப் பிரவாளம் ஏற்றது.

சுருக்கமாகத் தமிழகம் சென்னை இராஜதானியாக மருவியது.

மீண்டும் இந்த ஆட்சியில்தான் தமிழகம் தன் பெயரைக்கொண்டு நிமிர்ந்தது. "தமிழ்நாடு" என்றாகி நின்றது.

இராஜ இராஜ சோழனின் இராஜ தந்திரத்தைக் கொண்ட கலைஞர் ஆட்சியை சிறப்புற நடத்த பல வாரியங்களை ஏற்படுத்தியுள்ளார். செயல்படச் சுலபமாக இருக்கும். அந்த உத்தி இராஜ ராஜன் வழி வந்ததல்லவா? குடிநீர் பெருக்கம் குற்றம் குறைக்க ஊர்ச்சபை, மநுநீதிமுறை, வறுமை ஒழிப்பு குடிசை மாற்று வாரியம், பிச்சைக்கார மறுவாழ்வு, பசுமைப் புரட்சி, இலவசக் கல்வி முதலிய இன்னோரன்ன இயக்கங்களை அணுகிப் பார்த்தால் இராஜராஜசோழனின் அடிச்சுவடி தெரியும். தமிழாட்சி, ஒரு தமிழனின் ஆட்சி என்பதற்குச் சான்றாக

வெங்கொடுமைச் சாக்காட்டில் செந்நீரையும் கண்ணீரையும் சிந்தி டால்மியாபுரத்தை 'கல்லக்குடி' என்றாக்கியது முதல் பட்டினப் பாக்கம், பாரிமுனை, கிள்ளியூர், பொன்னி, பொதிகை, தாமரை, காஞ்சி, அன்பு, சுடர், தென்றல், வானொலி, மாநிலச் செய்தி ஈறாக இன்னும் எத்தனை எத்தனையோ கிடக்கின்றன!

முத்தாய்ப்பு வைப்பது போல் அமைந்தது உலகத் தமிழ்மாநாடும், தமிழ்ச் சான்றோர்களுக்கும் சிலைகள் அமைத்துத் தந்ததும்!

இலக்கிய உலகில் அவரின் நடை பலர் பின்பற்றும் நடை! அவர் பேச்சின் பாணி ஒரு தனிப்பாணி!

சரித்திரத்தைத் திரைப்படமாக்கிப் பலரும் பாராட்டப்பட்டது "பூம்புகார்".

மூவகை எழினிகளும், அரங்கேற்று காதையும் சிறப்பிலவெனினும் மதுரை எரியூட்டுதற்குத் தகுந்த காரணம் கற்பித்தலும், "ஒரு காற் சிலம்பின் ஒலி என் தவறினைச் சுட்டிக் காட்டிக் கொண்டே இருக்க வேண்டும்" என்று ஒற்றைச்சிலம்பு விற்பதற்கு விதர்ந்து கூறும் காரணங்களும் தனிச் சிறப்புப் பெற்றவை. சிலப்பதிகாரத்தைத் தெரிவதற்கு வேறென்ன சாதனம் வேண்டும்!

பல்லவர்களின் வரலாற்றில் ஒரு பகுதிதான் 'காஞ்சித் தலைவன்'.

பூம்புகாரின் பழம்பெருமைதனை அறிய உதவும் வகையில் அந்தச் சிற்றூரின் அருகில் அகழ்ந்து பார்க்கும் ஆராய்ச்சி நடைபெறுவது தமிழர் என்றும் போற்றவேண்டிய ஒன்று. நுண்கலைகளுள் கடினமான "சிற்பவியல்" பற்றி மாமல்லையில் பள்ளி தொடங்கி பண்டைய சிற்பவியல் அழியா வண்ணம் காக்க முனைவது, அங்கு வடிக்கும் சிற்பங்களைப் பூம்புகாரில் வைத்து ஒரு மலை நம் வரலாற்றுப் பொருட்காட்சி நடத்த உத்தேசித்திருப்பதெல்லாம் தமிழரின் நிலையான வாழ்க்கைப் பாரம்பரியத்தின் பறைசாற்றுக் கருவிகளன்றோ!

15-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை மங்கிக் கிடந்த தமிழ்நாடு மீண்டும் தன் புகழை நிலைநிறுத்திக் கொண்டது 20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்று வரும் சரித்திரம் வானளாவிப் புகழத்தான் போகிறது!

இசை, நாட்டியத் துறையில் இராஜராஜன் அரிதான பணிகளைச் செய்து முடித்தான்.

ஆண்டுதோறும் "ராஜராஜேசுவர நாடகம்" நடக்க ஏற்பாடு செய்திருந்தான்.

ஆடல் மகளிர் 400 பேரை நியமித்து அவர்கள் குடி இருக்கவும் வசதியளித்து நாட்டியத்தைப் போற்றி வளர்த்தான். அதற்கேற்ற இசையாசிரியர்களையும், தாளம் வாசிப்போரையும் ஆதரித்தான்.

அதுபோல் சிறப்புற்று வரும் தமிழகத்தில் தமிழிசை வளர வேண்டும். மாதவி ஆடிய பதினொறு வகை ஆடல்களின் இலக்கணங்கள் கண்டறியப் படவேண்டும். இன்னும் பல்வேறு வகைக் கூத்துகள் உயிர்த்தெழ வேண்டும்.

ஐவகை நிலங்கள் மாறுபட்டுத் திரிந்திடினும் அதற்கேற்ற பண்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஷண்முகப் பிரியாவும், கரகரப் பிரியாவும் ஹம்ஸத்வனியும், சத்பத மத்திமங்களும் பொருள் தெரியா தெலுங்குப் பாடல்களும் தமிழிசையில் இன்னும் இருக்க வேண்டுமா?

"இதுதான் குறிஞ்சிப்பண், இதுதான் செம்பாலைப் பண்" என்று இசைத்துக் காட்டும் கும்பகோணம் ப. சுந்தரேசனார், இசையரசு தண்டபாணிதேசிகர், இசைச் சித்தர் சிதம்பரம் ஜெயராமன் முதலியோரை ஊக்குவித்து தமிழிசையை மேடைகளில் முழங்க முயற்சி எடுக்கவேண்டும்.

1000 ஆண்டுகளாகக் கேட்பாரற்றுக் கிடந்த இராஜ இராஜேச்சுவரம் இப்போது புத்தொளி பெற்று விளங்கிய அந்தப் பெருவிழாவிலேயே தமிழிசையும் "பரத நாட்டியம்" என்ற பெயரில் சிதைந்து கிடக்கும் நம் பண்டைக் கூத்தின் வகைகளும் நிகழ்ந்திருக்க வேண்டும்! ஏனோ நடக்கவில்லை... வரவிருக்கும் வரலாற்றுப்பொருட்காட்சியாம் "பூம்புகார்ப் பொருட்காட்சி"யில் மாதவியாடிய பதினொறு வகை ஆடல்களும், ஐவகை பண்களும் இடம்பெற வேண்டும்.

கலைஞரின் ஆட்சிக் காலத்திலேயே இவையெல்லாம் நிலைபெற வேண்டும்.

ஆக எந்த வகையில் நாம் நுணுகிப் பார்த்தாலும் இராஜ இராஜ சோழனின் நிர்வாகத்தை—கற்பனையில் கண்ட அந்த உன்னத நிர்வாகத்தை சீரழிந்த தமிழ் நாட்டைச் செப்பனிட 500 ஆண்டுகளுக்குப் பின் நாம் இன்று ஆட்சியில் காண்கிறோம்.

இந்த 20-ஆம் நூற்றாண்டு தமிழரின் ஈடு இணையில்லாத "பொற்கால"மாக இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தமிழர் நாகரிகம், பண்பாடு, இலக்கியம், இசை நாட்டியம் வளர நாடு செழிக்க அத் திருவுடையோனின் வாழ்நாள் வளரட்டும். வளர்க அவர் ஆட்சி! வாழ்க அவரின் கலைப் பணி!!

★

# புரட்சிப் பெண்ணே!

(பாவலர். கருமலைப்பழம்நீ)

---

அங்கமெலாம் தெரிகின்ற ஆடை கட்டி;
அழகுமுக மலர்வெளுக்க வெள்ளைப் பூசி:
செங்கமலப் பூவிதழில் செம்மைத் தீட்டி;
சிரிப்பினிலே காதல்வெறி யூட்டி; கண்ணை
அங்குமிங்கும் சுழலவிட்டு முகிலாங் கூந்தல்
அலை அலையாய் அசைந்தாட சுருட்டி விட்டு;
சிங்கார நடைவீசி நடக்கும் பெண்ணே!
திரும்பிவா! நீசெல்லும் பாதை விட்டே!

கழுத்தணியும்; காதணியும்: நாக ரீக
கலையணியும்; அழகாமோ? தெளிந்தி டாமல்,
எழில்பொம்மை போல்நாட்டில் உலவி நாளும்
இருட்டறையில் வாழ்ந்ததெலாம்
போதும் பெண்ணே!

பழமையிலே போவென்று சொல்லவில்லை!
பகுத்தறிவுப் பாசறைசேர்ந் தாட வர்போல்
உழுதொழிலில்; பொதுப்பணியில்; விஞ்ஞா னத்தில்;
உணர்வெலாம் வினையாக்கு!
புரட்சிப் பெணே!

★



# எண்சுவைக் கலிங்கம்

( கருமலைத் தமிழாழன் )

கவிதை என்பது சொற்கூட்டமோ இலக்கணக் கட்டுக்கோப்போ அல்ல; படிப்போர் மனதை கொள்ளை கொள்ளும் வகையில் பல நயங்களும் அழகுகளும் அமைந்திருத்தல் வேண்டும். பத்தழகுகள் தம்முள் அடங்கியிருந்தால்தான் படிப்போர்களும் சலிப்பில்லாமல் கவிதையில் பேணியிருக்கும் அணிகளுக்காகவே பல முறை படித்துச் சுவைப்பர்.

ஒரு காவியம் என்றால் அது வெறும் கதைக் கோப்பாக மட்டும் இருப்பதல்ல. அந்த கதைக்கோப்புக்குள்ளே பலவித உணர்ச்சி பேதங்களை தாங்கி நிற்கவேண்டும். அவ்வாறு பல நயங்களால் படிப்போர்க்கு உண்டாகும் இன்ப உணர்ச்சியையே ரசம் என்று அறிஞர்களால் கூறப்பட்டது. அதனைத் தமிழில் மெய்ப்பாடு என்று கூறுகிறோம். தொல்காப்பியமும் ரசத்தை எண்சுவையாக வகுத்து விளக்கியிருப்பதை அதன் மெய்ப்பாட்டியலில் காணலாம். கவிஞர்கள் தாம் காணும் எல்லா பொருள்களையும் சுவையுடன் காணும் ஆற்றல் பெற்றவர்கள், இந்நிலை கவிஞர்களுக்கு மட்டும் அமைந்த தனித் தன்மை. இத்தகைய மன நிலை உணர்ச்சியின் அடிப்படையில் தோன்றுவதாகும். பண்டைய தமிழர்கள் அந்த உணர்ச்சியை எட்டு வகையாகப் பிரித்தார்கள். அவை நகை, அழுகை இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன. பிற்காலத்தார் சமநிலை என்ற ஒன்றை சேர்த்து நவரசமென கூறினர்கள்.

கலிங்கத்துப்பரணியை எடுத்துக் கொண்டால் அதன் கரு போரைப் பற்றிக் கூறுவது: பாட்டுடைத் தலைவனும் குலோத்துங்களின் வீரத்தைப் பற்றியும், வரலாற்றைப் பற்றியும் அவன் செய்த கலிங்கப் போரினையும் தாம் மையமாக உரைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு புறத்தையே உரைத்தாலும் அதனை நாம் மீண்டும் மீண்டும் படித்து இன்புறும் வகையில் பல அணிகள் கொண்டு முற்றிலும் தாழிசைப் பாக்களால் யாத்துள்ளார். பரணிக்கோர் செயங்கொண்டார் என்ற சிறப்புப் பெயரும் இதனுல் பெற்றுள்ளார்.

பரணியிலே பாடப்பட்ட பாக்களிலே பெறப்பட்டுள்ள அணிகளைக் காண்போம். "தற்குறிப் பேற்றணி" பொருள்களின் இயல்புகளை சிறப்பித்துக் காட்டுவது. உள்ளதை உள்ளவாறு கூறுதல் பெரும்பாலோருக்கு இயலும். அதைஅழகொழுக இனிமையாக எடுத்தியம்புவது கவிஞன் ஒருவனுக்கே இயலும். சயங்கொண்டாரின் கவிதைகளில் இத்தகைய பண்புகளைக் காணலாம்.

மங்கை யொருத்தி நுண்ணிடையை யுடையவள். கொங்கையின் பளுவைத் தாங்கமாட்டாமல் தள்ளாடி வருகின்றாள். 'பளுவால் இடை ஒடிந்திடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. அந்த அச்சத்தின் பிரதிபலிப்பால் அவள் கால்களில் அணிந்திருக்கும் சிலம்புகள் அபயக் குரல் எழுப்பி நடப்பதை நறுத்துக என முறையிடுவது போல் ஒலி எழுப்பியதாக கவிஞர் ஒரு பொருளின் கண் இயல்பாக நிகழும் தண்மையினை ஒழித்து தான் கருதிய வேறென்றினை - அதன்கண் ஏற்றிச் சொல்வதே தற்குறிப் பேற்றணி - பாடல் 58.

"உபயதனம் அசைவில் ஒடியும் இடை
நடையை ஒழியும் என ஒன்சிலம்பு
அபயம் அபயம் என அலற நடைபயிலும்
அரிவையீர் கடை திறமினே"

பொருள்களின் மேம்பாட்டை மிகுதியாகப் புலப்படுத்துவதற்கு உயர்வு நவிற்சியணி கையாண்டார். பாலை நிலத்தின் செம்மையினை மிகைபடுத்திக் கூறுவான் வேண்டி இங்கு இவ்வணியை கூறுகிறார். சிறையிருந்த செல்வியை மீட்பதற்காக இராமன் பொருட்டுக் கடலுக்கு அணையிடப் புகுந்த குரங்கினங்கள் மலைகளைச் சுமந்து வீணை தொல்லைகளை மேற்கொண்டனவே; இப்பாலை நிலத்தின் மணல் ஒன்றினை கடலில் இட்டாலே போதுமே; கடல் முழுதும் வறண்டிருக்கும் என்கிறார். பாடல் 96.

"அணிகொண்ட குரங்கினங்கள்
அலைகடலுக் கப்பாலை
மணலொன்று காணமல்
வரையெடுத்து மயங்கினவே"

ஒரு சொல்லிலே இரு பொருளைத் தருவது சிலேடை யணி அதனை பாடல் 73ல் காண்போம். அதில் பயிலும் சிலேடை நயம் எண்ணி எண்ணி மகிழ்வதற்குரியது. 'காஞ்சி எனும் சொல் இடையணியையும் காஞ்சி நகரையும் குறிப்பது. நடுவில் வெளி எனும் சொல் இடையையும் போர்க்களத்தையும் குறிப்பது. வேடனை எனும் சொல் மன்மதனையும் கருணாகரனையும் குறிப்பது. கானகம் என்ற சொல் காடு என்றும் மணம் பொருந்திய கொங்கை யென்றும் இரு பொருள் பட்டது. மகளிர் தம் இடையழகாலும், கொங்கையழகாலும் தம் கொழுநர்க்கு காம வேதனையை மிகுவித்து அவர்களை தம் வயமாக்கிக் கொள்வர். கருணாகரனும் வேடன், விலங்கு, பறவை முதலியவற்றின் உயிரைக் கவர்தல்போல் தம் பகைவரின் உயிரைக் கவர்வான் என்ற இரு பொருள் ஆக்கி வைத்தார்.

"நக்காஞ்சிக்கும் வடமலைக்கும்
நடுவில் வெளிக்கே வேடனை விட்(டு)
அக்கானகத்தே உயிர்பறிப்பீர்
அம்பொற் கபாடம் திறமினே"

இவ்வாறு அணிகளை கூறுமிடத்தைத் தவிர வேறு இடங்களிலும் கவிஞரின் கற்பனைத் திறனை நாம் காண முடிகிறது. இனி என் சுவைகளைக் காண்போம்.

சுவைநூலால் உவகையையே முதல் சுவையாகக் குறிப்பிட்டுள்ளார். தமிழ் இலக்கியங்களிலும் காதல் சுவையே முதன்மை இடம் பெறுகின்றது. காதலினை உயர்ந்த கலையாகவே வளர்த்திருக்கின்றனர். இக்காதலை களவு, கற்பு என இரு பிரிவுகளாக்கி அப்பிரிவுகளிலுள்ளே பல துறைகளாக்கி உள்ளனர். இந்த காதல் சுவையினை அனுபவிக்க மனத் தூய்மையும் சுவைக்கும் பழக்கமும் இருக்க வேண்டும். இந்த இரண்டு மில்லாதார் கற்பனை உலகில் காணும் இன்பக் கனவுகளாகின்ற வருணனைகளைக் யதார்த்த உலக நிகழ்ச்சிகளுடன் ஒப்பிட்டு நம் இலக்கியங்களை குறை கூறுகின்றார். போரைப் பற்றி கூறுகின்ற பரணியிலே உவ

கைச் சுவை இடம் பெற்றிருப்பதே இச்சுவையின் உயர்வை அறியலாம். கடை திறப்பு எனும் பகுதியில் இச்சுவையினை பல்வேறு கோணத்திலே காணலாம்.

புண்பட்டவருக்கு வேது கொடுத்துப் பின் மருந்திட்டுக் கட்டுதல் இயல்பு. ஒன்ருேடு ஒன்று தாக்கும்படியான உங்களுடைய கண்களாகிய கூர்மையான வேல்கள் உங்களின் தலைவர்களாகிய இளைய காளையர்களின் மார்பிலே தைத்து துளைத்துச் சென்றன. அதனுல் காம நோயாகிய புண்களை அவர்கள் பெற்றனர். அப்படிப் பெற்ற புண்களின் இன்பம் நீங்கும்படியாக, கருமையான முனைகளை உடைய உங்கள் இரண்டு முலைகளின் சூடும் தாக்கும்படியாக அழுத்தி மென்மையான கரங்களால் தழுவிக் கட்டும் பெண்களே. கடை திறமின் பாடல் 56.

"போரும் கண்வேல் இளைஞர் மார்பின்
ஊடுருவி புண்கள் தீர இருகொங்கையின்
கரும்கண் வேதுபட ஒற்றி மென்மை கொடு
கட்டும் மாதர் கடை திறமினே"

உலக வழக்கிற்கு மாருக நாம் எதையாகிலும் கூறினுல் அது நகைப்பினை உண்டாக்கும். ஆனுல் அத்தகைய நிகழ்வுகள் எல்லாம் நகைப்பினைத் தந்துவிடும் எனக் கூறவியலாது. இங்கு சில நகைச் சுவை விளைவிக்கும் காட்சிகளைக் காண்போம்.

பேய்களுள்ளும் முட்டாள் பேய்கள் இருந்தனபோலும். ஒரு பேய் ஓட்டைக் கலத்திலே கூழ் பெற்று உண்கிறது. கூழ் ஓட்டையிலே ஒழுகுகிறது. அந்த ஒழுகும் காட்சியைக் காண கலயத்தைத் திருப்பிப் பார்க்கிறது கூழெல்லாம் கொட்டிவிடுகிறது. கொட்டியபின் வயிறு நிரம்பாது பசிக் கொடுமையால் என்ன செய்வதென்றே தெரியாமல் விழித்துக்கொண்டு நிற்கும் இழுதைப் பேய்க்கு இன்னும் கொஞ்சம் கூழ் ஊற்றுவீர் பாடல் 572.

"பொல்லா ஓட்டைக் கலத்துக் கூழ்
புறந்தே ஒழுக மறித்துப் பார்த்து
எல்லாங் கவிழ்த்துத் திகைத்திருக்கும்
இழுதைப் பேய்க்கு வாரீரே!

போர்க்களத்திலே காணும் நிகழ்ச்சிகள் பல அழுகைச்-சுவை பயக்கவல்லது. கலிங்கப் போர் முடிந்த பின்னும் திரும்பி வராத தன் கொழுநனைத்தேடிக் கொண்டு போர்க்களத்துக்கு வருகிருள் மங்கை ஒருத்தி. அங்கு தன் கணவனின் உடல், முகம் கை வேறு வேருகவும் கால்வேருகவும் துண்டு பட்டுக்கிடக்கின்றது. தலை மட்டும் அவள் கைக்கு கிடைக்கிறது. ஏனைய உறுப்புக்களை நரிகள் இழுத்துச் சென்றன போலும். அவள் அவற்றை அடையாளம் காட்டுமாறு பயிரவி என்னும் பெண் தெய்வத்தை வினவுகிருள். என் கணவனுடைய போர் புரிந்த பெரிய கைகள் எங்கே? அக்கையில் பிடித்திருந்த வீரவாள் எங்கே? அழகிய மார்பு எங்கே? போரில் எத்தகைய வீரர்கள் எதிர்த்து வந்தாலும் முதுகு காட்டி ஓடாத பெரிய வல்லமை பொருந்திய தோள்கள் எங்கே? எங்கே என்று கண்ணீர் மல்க நா தழுக்கக் கேட்கிருள்!

"பெருதடக்கை வாளெங்கே மணிமார்
பெங்கே?
போர்முகத்தில் எவர்வரினும் புறங்
கொடாத
பருவயிரத் தோளெங்கே?
எங்கேயென்று பயிரவியைக்
கேட்பாளைக் காண்மின்"

கோபச் சுவையே வெளியாகும் பகைவர் செய்த தீச் செயலை நினைத்து மனம் கொதிக்கும் நிலையை குரோதம் என்று கூறுவர் குரோதத்தின் அடிப்படையில் மலர்ந்த சுவையே வெகுளியாகும். தான் திறை கொடாத செயலைக் காரணமாகக் கொண்டு குலோத்துங்கன் தன் நாட்டின் மீது படையை ஏவினுன் என்பதைக் கேள்வியுறும் அனந்த பத்மன் சினம் கொள்கிருன். மாறுபட்ட நிலைமையைச் சிறிதும் ஆராய்ந்து அறியாத வடகலிங்க நாட்டு மக்களுக்கு சிறந்த மன்னனுன அனந்த வன்மன் மிகவும் அஞ்சாமை உடையவனுகக் கொடிய கோபத்தை மேற்கொண்டான். அதனுல் கனலுமிழும் பெருமூச்சு விட்டான். கையோடு கைசேர்த்து கொட்டினுன். உடல் வியர்க்கப் பெற்ருன். அக் கோபக் குறியோடு குடிமக்களை ஆண்டான்.

"அந்தரம் ஒன்று அறியாத வடகலிங்கர்
குலவேந்தன் அனந்த பன்மன்
வெந்தழல்கண் வெகுளியினல் வெய்து
உயிர்த்துக் கைபுடைத்து வியர்த்து
நோக்கி"

பெருமிதச் சுவையைத்தான் வீரச்சுவை என்பர். எந்த சிக்கலான சமயத்தினும் மனங் குன்ருது செயலாற்றுவதை வீரம் மிக்க செயல் என்பர். வீரனது அடையாளம் போர்க் களத்தில் மட்டும் முன் நிற்பதல்ல. தன் உயிரைத் திரணமாக மதித்து செயலாற்றும் விதத்திலும் உள்ளது. தேவியை வழிபடும் வீரர்களை குறிப்பிடும் இடத்து வீரச் சுவை வெளிவருகின்றது. தாங்கள் கோரும் வரத்தைத் தரும்படியும் அதற்கு ஈடாக தங்கள் உறுப்புக்களை அரிந்து தருவதாகவும் வீரர்கள் பாடும் முழக்கம் எம்மருங்கும் கேட்கப்படுகின்றது. சில வீரர்கள் ஓமத் தீயை வளர்த்து தங்கள் விலா எலும்புகளைச் சமித்தாகவும், தங்கள் செங்குருதியினை ஆகுதியாகவும் ஊற்றுகின்றனர். வீரர்கள் தங்களுடைய பெரிய தலையைக் கழுத்தின் அடியிலே அறுப்பார்கள். அறுத்த தலையைக் காளியின் கையிலே கொடுப்பார்கள். கொடுத்த தலைகள் தேவியைப் போற்றும். தலை குறைந்த உடல்கள் தேவியை கும்பிட்டு நிற்கும்.

"அடிக்கழுத்தி னுடன்சிரத்தை அரிவராலோ
அரிந்தசிரம் அணங்கின்கை
கொடுப்பராலோ ;
கொடுத்தசிரம் கொற்றவையை பரவுமாலோ
குறையுடலம் கும்பிட்டு நிற்குமாலோ"

அச்சம் மாதர்களின் உடன் பிறந்த சொத்து என்றே கூறலாம். அச்சவுணர்வு இல்லாதவர்களே இல்லையென்றுஅறுதியிட்டு உரைக்கலாம். அவரவர்கள் மனத்திற்கேற்றவாறு அச்சத்தை உண்டாக்கும் பொருள்கள் வேறுபடலாம். இவ்வளவு இன்றியமையாதது எல்லோரிடத்தும் அமைந்திருக்கும் இச் சுவையை இலக்கியத்தின் முக்கிய சுவையாகக் கொள்ளாவிடினும் ஆங்காங்கு சிறப்பாகக் கையாண்டுள்ளார்.

எழுகலிங்க மன்னன் போரிலே கருணுகரனுக்கு எதிர்நிற்க முடியாமல் அஞ்சி இடம் தெரியாதபடி மறைந்துகொண்டான். களத்தில் கணக்கற்ற கலிங்கர் மாண்டார்கள். 'ஏழு பிரிவுகள் உள்ள கலிங்க நாட்டில் உள்ளவர்கள் மிகுந்த நடுக்கத்துடன் கதறி ஓடினுர்கள். சோழ வீரர்கள் போர் புரியும் திறனைக்கண்டு இது என்ன மாய வித்தையோ? நான்கு பக்கமும் சூழ்ந்துகொண்டு எரிக்கும் நெருப்போ? உயிரைக் குடிக்கும் யமனே? ஊழிக் காலத்தின் முடிவோ? வேறு எதுவோ? என்று துணிந்து சொல்ல முடியவில்லையே என்று கூறி மிகவும் அஞ்சினர் கலிங்கர்.

"எதுகொல் இது! மாயை ஒன்றுகொல்!
எரிகொல்! மறலிகொல்! ஊழியின் கடை
அதுகொல் என அலறி இரிந்தனர் அலதி
குலதியொடு ஏழ்-கலிங்கரே!

அருவருப்பு அல்லது இழிவு தோன்ற நிற்கும் செயல்கள் அனைத்தும் இளிவரல் சுவையினை நல்கும். நாணத் தக்க செயல்களாலும் இச்சுவை பிறக்கும். கருணாகரனும் அவன் வீரர்களும் கலிங்க நாட்டைத் தாக்கிய பொழுது அவர்கள்முன் நிற்க மாட்டாது கலிங்க வீரர்கள் மாற்றுருவைக் கொண்டு மறைகின்ற செய்திகளை கூறுகின்ற தாழிசைகளில் இச்சுவையைக் காணலாம். மலைகளில் மறைந்து கொண்டிருந்த கலிங்க வீரர்களை சோழ வீரர்கள் பிடித்த போது கலிங்கன் தம்முடைய வில்லின் கயிற்றைப் பூணூலாக திரித்துக்கொண்டு நாங்கள் வேதியர்கள் கங்கையிலே நீராட வந்தோம். உங்களைக் கண்டு பயந்தோமே அன்றி நாங்கள் கலிங்க வீரர்கள் அல்ல என்று பகைமையை ஒழித்து பொய்யுரைத்து பலர் உயிர்பிழைத்தனர்.

“வேடத்தால் குறையாது முந்நூல் ஆகி
வெஞ்சிலை நாண்மடித்து இட்டு
விதியில் கங்கை
ஆடப்போந்து அகப்பட்டோம்; கரந்தோம்
என்றே அரிதனை விட்டு உயிர்
பிழைத்தார் அநேகர் ஆங்கே.”

இயற்கைக்கு மாறுபாடாக எதையாகிலும் கண்ணுற்றால்வியப்புத் தோன்றுகிறது. நகையினை விளைவிப்பவை வேண்டாதவைகளாக இருக்கலாம். வியப்பினை நல்குபவை அப்படியன்று. விரும்பும் வண்ணமே யிருக்கும். நாம் எதிர்பாராத ஒன்று நிகழ்ந்துவிட்டாலும் வியப்படைகிறோம். இதுவே மருட்கைச் சுவையாகும்.

இமயத்திலிருந்து வந்த முதுபேய் தான் கற்றுவந்த இந்திரசால வித்தைகளைக் காட்டும்போது நாம் வியப்பால் ஆழ்ந்துவிடுகிறோம். காட்சிகள் எல்லாம் நேரில் காண்பது போன்ற நிலையினை உண்டாக்கி விடுகிறது. முதுபேய் வித்தைகளைச் சொல்லியவண்ணம் செய்து காட்டியது இதோ. இந்த வலக்கையில் சில துதிக்கைகளைப் பார்! அவற்றை இடக்கைக்கு வர வழைத்தவுடன் உருவம் மாறி மதம் பொழியும் யானைத் தலைகளாயின அதனைப் பார் என்றலை. பாடல் 163.

“இக்கையில் சில துதிக்கை பார்!
மாறி இக்கையில் அழைக்க
மற்றவை மதகரித் தலைகள்
ஆன பார்”

ஒரு காப்பியம் என்றால் அதில் இதுபோன்ற பல்வேறு வகைப்பட்ட உணர்ச்சிப் பேதங்களும், அணிகளும், அழகுகளும் ஒன்றோடு ஒன்று பிணைந்து இன்பம் ஊட்டுகின்றன. இதனை அறிந்து சுவைப்போமானால் கலிங்கத்துப் பரணியை கரம் விட்டு கீழே வைக்க நம்மால் இல்லாது. நம்முடைய மனக் கவலைகளை மறந்து புதிய அந்த உலகத்திலே புகுந்து அதனுடனே ஒன்றிவிடுகிறோம். காவியமென்றாலே புனைந்துரைகள் என்று ஒதுக்கித் தள்ளும் சில ரசிப்புத் தன்மை அற்றவர்களுக்கு இதன் அருமை எங்கே தெரியப் போகிறது. சுவைக்கின்ற முறையினை அறிந்து சுவைக்கின்ற போதுதான் அதனுடைய பெருமை புலப்படும். இதைப்போன்றே மற்ற காவியங்களையும் சுவைத்து இன்புறுவோம்! *

---

## டாக்டர் சாலை இளந்திரையன்
## சாலினி இளந்திரையன்
### மேற்குத் தமிழகத்தில்
## சுற்றுப் பயணம்

தமிழக சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பேராசிரியர் சாலை அவர்களும் சாலினி அவர்களும் **12—6—72** முதல் **28—6—72** வரை மேற்குத் தமிழகத்தில் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்கள்.

சூன் 12, 13 தேதிகளில் ஒட்டன் சத்திரம், பழனி ஆகிய இடங்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்தி, 14-6-72 இல் கோவை வரும் சாலைத் தம்பதிகள், 15-6-72 இல் (கேரளம்) சித்தூர் தமிழ் மாணவர்களைச் சந்திக்கிறார்கள். 16-6-72 இல் கோவை, சுண்டப்பாளயம் தமிழ் இலக்கியப் பேரவை விழாவில் கலந்துகொள்ளுகிறார்கள். 18-6-72இல் திருப்பூர் தமிழ் இலக்கியப் பேரவை விழாவில் கலந்துகொள்ளும் பேராசிரியர்கள், 25—6—72 வரை பங்குகொள்ளும் நிகழ்ச்சிகள் வருமாறு : 19-6-72 ஈரோடு; 20 - 6 - 72 திருச்செங்கோடு; 21-6-72 நாமக்கல்; 22-6-72 பிற்பகல் காரைக்குறிச்சிப்புதூர், மாலை: கொண்டலாம்பட்டி; 24 - 6 - 72 இடைப்பாடி; 25-6-72 மேட்டூர் அணை; 26 - 6 - 72 தருமபுரி; 26-7-72 ஊத்தங்கரை.

28 - 6 - 72 காலையில் சென்னைக்குப் புறப்படும் சாலையர், வழியில் காஞ்சிபுரம் சென்று ஈழத்து அடிகளாரையும் மற்றும் நண்பர்களையும் சந்திப்பார்கள்.

---

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

முறையைத் தனியே ஆராய்வது யாப்பிலக்கணம் அமைந்த காலம் இறையனார் அகப்பொருளுரை காலம் எனலாம். வடநூல்ஆராய்ச்சியின் பயனாக உவமை முதலிய அலங்காரங்களை ஆராய்ந்தவர்கள் அணி இலக்கணம் என ஐந்து பிரிவும் கூறியகாலம் தண்டியலங்கார காலம் எனலாம்.

சொல் பொருள் கூறுவது அகராதியும் நிகண்டுமே அன்றி இலக்கண நூலன்று. அணி இயல் அலங்கார சாஸ்திரமே அன்றி இலக்கண ஆராய்ச்சியாதலின் அதுவும் நாம் வழங்கும் இலக்கணமாவதில்லை. இதனால் எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் மட்டுமே நன்னூலும் தொன்னூலும் கூறுகின்றன.

### இலக்கண விதிகள்

1. இலக்கணமானது முக்கியமான எல்லாப் பண்புகளையும் கூறுவதாக இருக்கவேண்டும். 2. இலக்கணமாவது இலக்கியமாகிய பொருள்களின் பண்புகளைக் கூட்டியும் குறைத்தும் கூறலாகாது. அவை சம பரப்பையுடையவையாக இருக்க வேண்டும் 3. இலக்கணம்தெளிவாகஇருக்கவேண்டும். இருபொருள் தரக்கூடிய மொழிகளும் அலங்கார நடையும் இல்லாததாயும் இருக்க வேண்டும் பொருளை தெளிவுபடுத்துவதே இலக்கணம் கூறுவதின் நோக்கமாகும். 4. இலக்கணத்தில் பொருளின் பதத்தையோ அதன் திரிபையோ பரியாயபதத்தையோ உபயோகிக்கக்கூடாது 5. இலக்கணத்தை உடன்பாட்டுமுறையில் கூறமுடியும் இடங்களில் எதிர்மறை முறையில் கூறலாகாது. ஏனெனில் இலக்கணத்தின் நோக்கம் ஒரு பொருள் இத்தன்மையது என்று கூறுவதேயன்றிஇத்தன்மையதன்று என்று கூறுவதன்று.

இத்தன்மைத்தாகிய இலக்கணங்களை அறிந்து தமிழ் மொழியினை கற்று அதன் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தருதல் தமிழ் படித்தார் கடனாகும்.

வாழ்க தமிழ்!

*

மொழிக் கட்டுரை

# இலக்கணம்

மொழிகளைக் கொண்டே நாம் எண்ணவும், எண்ணியவற்றைப் பிறர்க்கு உரைக்கவும் செய்கின்றோம். அந்த மொழிகளின் இலக்கணத்தைத் தெளிவாகக் கொள்ளாவிட்டால் நம்முடைய எண்ணமும் பேச்சும் தெளிவாக இரா. இலக்கணம் என்பது ஒரு பதத்தாற் குறிக்கப்படும் பண்புகளின் விளக்கமாகும்.

## இலக்கணம் கற்பதின் நோக்கங்கள்

டாக்டர் ஸ்வீட் என்ற ஆங்கிலப் பேராசிரியர் இலக்கணம் மொழியின் பல்வேறு கூறுகளைக் கூறும் பகுதியென குறிப்பிடுகிறார். இலக்கணம் என்பது மொழியின் இலக்கியத்தைப் பல பகுதிகளாகப் பாகுபடுத்திக் கூறும் நூல், தமிழ் மொழியைப் பொறுத்தவரை ஆழ்ந்த இலக்கண அறிவு இருந்தால்தான் இலக்கியத்தின் பல நுட்பமான கருத்துக்களைக் கூர்ந்து உணர்ந்து சுவைக்கமுடியும். இலக்கணம் மொழியின் கண்ணாகும். இலக்கணம் கற்றலின் பயன் :

எழுத்தறியத் தீரும்
இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறன் முட்டறுப்பான்
ஆகும்—மொழித்திறன்
முட்டறுத்த நல்லோன்
முதனூல் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்.

என்ற சிவஞான முனிவர் சூத்திர விருத்தியின்வாயிலாக இலக்கணத்தின் இன்றியமையாமை அறியலாம்.

உடற்கூற்று நூலறிவும் மருத்துவத்துறை வல்லாருக்குப் பயன்படுதல்போல இலக்கண அறிவுமொழியைக் கற்பிப்பாருக்குப் பெருந்துணையாக இருக்கும் ஏனெனில் உடற்கூற்று நூலறிவு உடலைப்பற்றிய விபரங்களைத் தெரிந்துகொள்ளவும், உடலைப் பாதுகாத்துக் கொள்ளவும் பயன்படுவதுபோல, இலக்கண அறிவு மொழியின் அமைப்பை ஓரளவு அறிந்துகொள்ளவும் அதைத் திருத்தமாகப் பேசவும் எழுதவும் துணை செய்கிறது. மொழி நூலறிவுக்கு இலக்கணமே இன்றியமையாத அடிப்படையாகும். பேச்சு வழக்கில் காணப்படும் மொழி மரபுகளை நமக்குத் தெற்றென எடுத்துக் காட்டுவதற்கு அது பயன்படுகிறது. பேச்சிலும் எழுத்திலும் நேரிடும் பிழைகளைத் திருத்திக் கொள்வதற்கு இலக்கண அறிவுத் துணையாக இருக்கிறது.

செய்யுட்களைப் பிரித்து பொருள் காணவும், சிலேடைப் பொருள் கண்டு மகிழவும், செய்யுட்களில் வரும் இலக்கண அமைதிகள்அய்ய சொல்லாட்சிகள் முதலியவற்றை அறியவும், அவற்றில் காணப்பெறும் இறைச்சிப் பொருள் உள்ளுறை உவமம் போன்ற அரிய கருத்துக்களை அறிந்து இலக்கிய இன்பத்தை நுகரவும் இலக்கண அறிவு பெரிதும் பயன்படுகிறது. ஐந்திலக்கணங்களை ஓரளவுஅறிந்து இருந்தால்தான் தமிழ் இலக்கியத்தைநன்கு சுவைக்க முடியும்.

## ஐந்திலக்கணப் பகுப்பு

தமிழ் இலக்கணம் ஏனைய மொழியிலக்கணங்களோடு ஒப்பவைத்து நோக்குங்கால் எழுத்து, சொல் என்ற இரண்டில் மாத்திரம் ஒத்து நிற்கிறது. பொருளிலக்கணம் என்பது தமிழுக்கே சிறப்பாய் அமைந்துள்ளது. மக்கள் உள்ளத்தில் எழும் எண்ணங்களுக்கு வடிவம் கொடுத்து வெளிப்படுத்துவது சொல், அச்சொற்கள் தம்மில் தொடர்ந்து நிற்கும் இயல்புகளை விளக்குவது சொல்லிலக்கணம்.

சொற்களுக்குப் பொருளாயுள்ள எண்ணங்கள் மக்களுடைய உலகியல் வாழ்வில் எழுவன. அதனால் சொற்களால் உணர்த்தப்படும் பொருள் பலவும் வாழ்வில் கண்டும், கேட்டும் உற்றும் உணர்தலும் எய்துவனவாகும். எண்ணும் எண்ணங்களும், சொல்லும் சொற்களும் கருத்துக்களும் செய்யும் வினைகளும் யாவும் பொருள் எனப்படுகின்றன, இப்பொருள்களை உணர்த்துவதும் உணர்வதும் சொல்லின் நோக்கமாதலால் சொல்லிலக்கணத்தோடு பொருளிலக்கணம் உரைப்பது தமிழ் மரபாயிற்று அது பற்றிய எழுத்தும் சொல்லும் பெற்றுப் பொருள் பெறுமாயின் பயனில்லை என்பது தமிழறிஞர் கூறுகின்றனர்.

இலக்கியத்தன்மையை வரைந்து கொள்வதோடு நியமதாய் ஒருங்கு நிகழ்வது இலக்கணம் என்பது தருக்க நூலோர் முடிவு. "இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் கூறல்" என்பது நன்னூல்.

ஒரே இலக்கண மரபு உலகு எங்கும் பரவவில்லை. மொழிக்கு மொழி இந்த மரபும் மாறும். காலத்நுக்கு காலமும் மாறும். இதனலேயே லத்தீன், வடமொழி —முதலிய பழைய மொழிகள் வழக்கின்றி போக அவற்றின் மாறிய வடிவங்களாக, இந்தி இத்தாலி முதலியவை புதிய மொழிகளாக வருகின்றன. ஆகையால் ஒரு மொழியின் இலக்கணத்தினை விளக்குவது தக்கதன்று. லத்தீன் இலக்கணமே ஆங்கில இலக்கணம் என்று பல நாள் ஆராய்ந்தவர் உண்மை காணது மயங்கினர். இவ்வாறே வடமொழி இலக்கணமும் தமிழ் இலக்கணமும் என்ற ஆராய்ச்சியும் இத்தகையதேயாகும்.

"சொற்கள் வாக்கியமாகிக் கருத்தினை எவ்வாறு விளக்கி வருகின்றன என்பதனை ஆராய்வதே இலக்கணம் என மேனுட்டால் வழங்கி வருகிற கருத்தாகும் என்று டாக்டர் மு. வரதராசனுர் கூறுகின்றார். வடமொழி வியாகரணமும் இத்தகைய ஆராய்ச்சியே ஆம். ஆனுல் இவ்விலக்கணங்களுக்கு முற்றிலும் மாறுபட்டது. தமிழ் இலக்கணமாகும் எனக் கூறி வருகின்றனர்.

எழுத்தின் ஓசை, மாத்திரை, புணர்ச்சி மாற்றம் முதலியவற்றை ஆராய்வது எழுத்திலக்கணம். சொற்கள் பெயர் வினை இடை உரி என்ற பாகுபாட்டோடு பலவாறு சொற்றொடராக இயைந்துவரும் மரபுகளை ஆராய்வது சொல்லிலக்கணம். இலக்கியங்களில் வரும் பொருள் பாகுபாட்டினை அகம் என்றும், புறம் என்றும் முறை செய்வது பொருள் இலக்கணம். தமிழ் இலக்கணம் இந்த மூன்று பிரிவாக மட்டும் அமைந்தது தொல்காப்பியமாகும். இந்தப் பொருள்களைப் பாட்டாகவும் உரைநடையாகவும் கூறும்போது இலக்கியம் செய்யுளாக (Literary Composition) வரும். செய்யுளின் அமைப்பு

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரூர் வித்துவான்
தே. வே. சந்தானம்

அறிஞர் அண்ணாவின் கொள்கைகளில் வளர்ச்சிப் போக்குகள் :

# இந்தியத் துணைக்கண்ட விடுதலையும் அறிஞர் அண்ணாவும்

( அருணா இராசகோபால், எம்.ஏசி. (வேளாண்) )

அறிஞர் அண்ணா அவர்கள் (1) பழம்புகழ் தமிழ்ப் பண்பாட்டில் புதுமைக் கொழுந்து, அப்பண்பாட்டுப் புதுப் புகழின் பழமை அடிவேர், (2) அண்ணா இந்திய விடுதலைப் போராட்டக் காலந்தில் நீதிக் கட்சியிலும், திராவிடர் கழகத்திலும் ஒரு தலைவராக இருந்து இந்திய விடுதலையை எண்ணாதவர் (3) ஒரு காலத்தில் இந்திய — தமிழக சாதி வேறுபாட்டு சமுதாயத்தின் மேல்சாதி மக்களைத் தாக்கியவர். பிற்காலத்தில் அந்த சமுதாய அமைப்பிற்குரிய பின்னணிகளை மட்டும் தாக்கியவர்; அந்த சமூகக் காவலர்களோடு உறவாடியவரும் அவரேயாகும். (4) அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினையாளர். பிற்காலத்தில் இந்திய நாட்டு ஒருமைப்பாட்டில் ஆர்வலரானார். (5) ஒரு காலத்தில் சமுதாய சிக்கல்களில் புரட்சியின் பூபாளம். அவரே பிற்காலத்தில் புதுமணத் தென்றலானார். (6) அண்ணா ஒரு காலத்தில் மதம்— கடவுள் வெறுத்த நாத்திகர் — அவரே "நான் எந்த மதத்திற்கும் பகைவனும் அல்ல, மதவாதியுமல்ல. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்." என்றார். இங்ஙனம் புதிராகவும், முரண்பாடுகள் கொண்டவராகவும் தோன்றுகின்றார். இந்த முரண்பாடுகள் அரசியலில் அவரோடு மோத விழைந்தவர்களுக்கு நல்ல தீனியாக அமைந்தன. எனினும் அண்ணாவே இறுதியில் வென்றார். இத்தோடு இந்திய —தமிழகக் குமுகம்-அதன் இயக்க இயல் — பொருளியல் — அரசியல் ஆகியவற்றை ஆழ்ந்து நோக்கினால் அந்த புதிரான மனிதர் பற்றிய விளக்கங்கள் தெளிவுபடும். மேலே சொல்லப்பட்ட ஆறு முரண்பாடுகளையும் ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாக இல்லாமல், ஒரே ஒரு முரண்பாடு மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

இக்கட்டுரைக்குரியத் தகவல்கள் முழுமையானவை எனக் கூறத் துணியமுடியாது; என்னும் திரட்டப்பட்ட தகவல்கள் ஆய்விற்குரிய எடுகோளை (hypothesis) நிலை நாட்டுவதற்குப் போதாது எனவும் சொல்ல முடியாது. இக்கட்டுரையில் அண்ணா அவர்கள் இந்தியத் துணைக்கண்ட விடுதலைப் போராட்டக் காலத்தில், விடுதலையை விரும்பாத நீதிக்கட்சியில் இருந்ததையும், பிற்காலத்தில் விடுதலையை வரவேற்றதையும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு விவாதிக்கபடுகின்றது.

## இந்தியமும் இந்தியச் சமுதாயமும்:

இந்தியத் துணைக்கண்ட விடுதலையைப்பற்றி சிந்திக்கும்போது இப்பூபாகத்தின் வரலாற்று சமுதாயப் பின்னணிகளை முதலில் மதிப்பிடவேண்டும். இந்தியத் துணைக்கண்டம் இருபெரும் மொழிக் குழுக்களின் தளமாகி உலகில் நாகரிக ஒளியரப்பிய நாடு. பல்வேறு அரசுகளின் ஆளுகைக்கு உட்பட்டும், போரின் களமாகியும் இலங்கிய மண்ணகம். வட இமயப் பெருமலையின் கணவாய்கள் வழி பல்வேறு இனங்கள் அலையலையாக படையெடுத்து அதன் விளைவாகப் புதிய பண்பாட்டு—சமுதாயக் கோலங்களை வரைந்திருந்த திருநாடு. வரலாற்றுக் காலந்தொட்டு பல்வேறு மெய்யுணர்வுகள் (தத்துவங்கள்) தோன்றி ஒளிர்ந்தும், பரந்தும், மறைந்தும், புது மலர்ச்சியும் பெற்றிருக்கின்றன. புத்தம், வள்ளுவம் ஆகிய மனிதப் பண்பளாவிய மானுடக் கோட்பாடுகளும், வேதங்களும், உபநிடதங்களும், மானுடநெறி அழிக்க வழி கண்ட மனுநெறியும் தோன்றியதோடு பிற்காலத்தில் இசுலாம், கிருத்துவ நெறிகளையும் ஏற்றுக் கொண்ட மண்ணகமும் இதுவேயாகும்.

இந்தியம் (இந்தியா) அதன் வரலாற்றுக்காலந்தொட்டு ஒருநாடாகவோ, ஒரு சமுதாயமாகவோ இலங்கியதில்லை. ஒரு சமுதாயம் என்பதற்கான வடிவங்களைப் பெற வாய்ப்புகள் இல்லாமல் போனது உண்மையாகும், இந்தியாவின் பல்வேறு (மொழித்) தேசிய இனங்களாக உள்ளனவே தவிர, தேசிய இனத்திற்கான முழுநிறை வளர்ச்சியைப் பெறவில்லை. மொழி, பண்பாடு. வட்டாரம் ஆகியக் காரணிகளால் வடிவம் பெற்றுவரும் தேசிய இனங்களுக்குள்ளும் சாதி, சமயம், மூட எண்ணம், தன்னகங்காரம், சுரண்டல், சோம்பல், மானுடப் பற்றின்மை ஆகிய தீமைகளால் வேறுபாடுகள் நிலவி வருகின்றன. புற எதிர்ப்புகள் வரும்போது பெயரளவு ஒற்றுமையும் அது மங்கியபோது பாழ் செய்யும் உட்பகையும்தான் நிலவி வந்திருக்கின்றன. தோற்ற காலம் தொட்டு வெறும் இனக் குலச் சமுதாயங்களாகவே (Tribal Societies) வாழ்ந்தது மட்டுமல்ல, இன்றும் அந்த வடிவங்களே உள்ளன.

உலகின் எந்த மூலையிலும் இல்லாத 'சாதி' என்னும் தனியான அமைப்பு நிலவி வருகின்றது. மதங்கள் அதன் தோற்ற காலத்தில் மானுட வாழ்வு பயன் கருதித் தோன்றினாலும், இறுகி, இயக்கமின்றி துருவேறிய நிலை கண்டு. இத்துருவேறிய அமைப்புக்கள் கொடுவாளாகி, கொடியோர் கரமேறி இந்தியத்தைக் குருதிக் காடாகவும், கொடுமைகளின் மையமாகவும் ஆக்கிய நிலையினையும் - ஆக்குகின்ற நிலையினையும் 'இந்திய - பாகிஸ்தான்' பிரிவினை

சிறப்புக் கட்டுரை !

கலவரங்களும், சில ஆண்டுகளுக்கு முன்னர் அகமதாபாத்தில் நடந்த இந்து (என சொல்லப்படும்) - இசுலாம் கலவரங்களும் மெய்ப்பிக்கின்றன. சாதியின் பேரால் நாளும் உரிமையிழந்து, மானுடமழிந்து உலக மக்கள் தொகுதிகளிலே மிக இன்னலுற்ற மக்கள் தொகுதியாக வாழும் இந்திய நாட்டு அழுத்தப்பட்ட மக்களின் வாழ்வு நிலை, இந்தியத்தின் கொடும்புற்று நோயாகும். இந்நோய் இந்தியத்தை மட்டுமல்ல உலகின் தூய்மையையே கெடுத்து வருகிறது. "தன் சாதி நலத்திற்காக இந்துக்கள் நாட்டுக்கு இரண்டகம் (துரோகம்) செய்து கொண்டிருக்கின்றனர். மொத்தத்தில் இந்து (என சொல்லப்படும்) சமுதாயம், அதாவது இந்தியாவின் பெரும் பகுதி மக்கள் தொகுதி கலகக் கூட்டமாகவே செயல்படுகின்றது." (அம்பேத்கார், 1936.)

இந்த சமுதாயத்தில் புரட்சிக் கருத்துக்கள் அவ்வப்போது தோன்றினும் அவை கடுமையான எதிர்ப்புகளுக்கு ஆளாகி வந்திருக்கின்றன. புதிய கருத்துக்கள் வலிவு பெறும்போது அதை எதிர்க்காமல் வாளாவிருப்பதும், புதியக் கருத்தினைத் தோற்றுவித்தவர்களைப் பின் பற்றுவோர்போல் பசப்புவதும், அவர்கள் இறங்கும்போது வருந்துவதும், அந்த செம்மல்கள் எந்த கருத்திற்காகப் போராடினார்களோ அதற்கு எதிராக வழக்கம் போல் தெய்வங்கள், கடவுள்கள் இவர்களுக்கிடையே புதிய தெய்வங்களாக்கிவிடுவதும் இந்த சமுதாயத்தின் சடங்காகும்.

இந்திய சமுதாய மக்கள் ஆன்மீகவாதிகள் என சொல்லப்படுவது உண்மையல்ல. "இந்திய சமுதாயம் ஒருதேக்க சமுதாயம்; அதைத் தவருக ஆன்மீகச் சமுதாயம் என்கின்றனர்" (நேரு, 1956). இந்தியாவில் ஏழைகள், எளியவர்கள், நோயாளிகள், ஆதரவற்றவர்கள் ஆகியோர்க்கு உதவ ஆளில்லை (ஆர்தர் கோஸ்ட்லர், 1961).

இந்திய சமுதாயம் அதன் வரலாற்றுக் காலந்தொட்டு நான்முகப் பிறப்பினை வகுத்த வேத வழிச் சமுதாயமாக கூர்தலறம் (பரிணமம்) கொண்டுள்ளது. வேதங்கள், மனுநெறி ஆகியவற்றிற்கு முற்றிலும் மாறுபட்ட தொல்காப்பிய — வள்ளுவ பண்பாட்டைத் தென்புலம் கொண்டிலங்கியதாயினும் இடை இருட்காலம் அந்த பண்பாட்டிலும் வேத—மனு நீதிகளைப் புகுத்தி இருள் பரப்பி வெற்றி கொண்டிருக்கின்றன. இக்கால சமுதாய ஆய்வுகளுக்கு ஒட்டு மொத்தமாக இந்திய சமுதாயத்தை மதிப்பிடுங்கால் அதை ஒரு வேதாந்த சமுதாயமாக மதிப்பிட முடியும். "வேதாந்தச் சமுதாயம் வாழ்க்கைத் தத்துவங்களை வேதங்களினின்று பெற்றவை. உழைப்போர்-உழைக்காதவர் (உழைக்காத உயர் குலத்தவர்), நாணயமானவர் நாணயமற்றவர் ஆகியோரை ஒரு சேர மகிழ்வூட்டி நிற்கும் பண்பாடு வேதாந்தப் பண்பாடு" என இராசகோபாலாச்சாரி (1946) சுட்டிக் காட்டுவதைக் கணக்கில் எடுத்துக் கொள்வது நலமாகும்.

இந்திய சமுதாயத்தில் அண்மை காலம் வரைப் "பல்வேறு வாழ்க்கைக் கோட்பாடுகள், பழக்க வழக்கங்கள், வாழ்க்கை நலன்கள் நிலவி பிரிவுகள் காணப்படுகின்றன." (குனர் மிர்டால், 1967) இதன் விளைவாக இந்தியத்தில் பொதுவான தன்மைகளை உருவாக்க இயலாததோடு ஒற்றுமை, இணக்கம், கூட்டுறவு, ஒருமைப்பாடு ஆகிய அடிப்படைத் தேவைகள் இயலாது போய்விடுகின்றது.

இந்தியச் சமுதாயங்களில் நிலவும் நிறுவனங்கள் (Institutions) சமுதாயத் தன்மைகள் (Values) சில செயல்களுக்கு நிகழும் எதிர்வினைகள் (Reactions) ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்டு மொத்தத்தில் இந்திய சமுதாயம், சமுதாய வடிவம் பெறுமல் இன குலச் சமுதாயங்களாக, சாதியால் மானுடம் அழிந்து, கலகக் கூட்டமாக, பிற்போக்கு, இயங்கா (Static), தேக்க (Stagnated) சமுதாயமாக விளங்கியது - விளங்குகின்றது. சுருங்கச் சொன்னல் இந்துச் சமுதாயம் அல்லது இயங்கா தேக்கச் சாதி சமுதாயம் (Static - Stagnated - Stratified Society) என பெயரிடலாம்.

## புறச்சான்றும் — அகச்சான்றும் :

இந்த மதிப்பீட்டை உறுதிபடுத்த மார்க்ஸ் (1853) இந்தியாவைப் பற்றிக் குறிட்பிட்டுள்ளவற்றைக் குறிப்பிடலாம். "சமுதாய நோக்கில் ஆய்ந்தால் இந்துஸ்தானத்தைக் கீழ்த்திசையின் அயர்லாந்து என்றே கூறவேண்டும். இவ்வாறு சிற்றின்ப ஈடுபாட்டு உலகமும் - மிகுதுயர் வருத்தும்



உலகமும் வியப்பான முறையில் சேர்ந்திருப்பதை இந்துஸ்தான சமயத்தில் பண்டைய மரபுகள் (முன்பே உணர்ந்து) புலப்படுத்தியிருக்கின்றன. அந்த மதம் புலனுணர்ச்சி இன்பங்களில் மூழ்கித் திளைப்பதை வலியுறுத்தும் மதமாக உள்ளபோதே, தன்னைத்தானே வதைத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தும் துறவு மதமாகவும் விளங்குகிறது. லிங்கத்தை வழிபடும் சமயமும் அதுவே. ஜகந்நாதனின் மதமும் அதுவே. தேவதாசி மதமும் அதுவே; சன்னியாசியின் சமயமும் அதுவே...இந்தியாவின் கடந்த காலத்தில், அரசியல் எவ்வாறு மாறிய போதிலும் சமுதாய நிலை மாறவில்லை; பண்டு ஒழிந்த காலத்திலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை மாறவேயில்லை ...அரசுகள் சிதைந்து சின்னபின்னமானதைப் பற்றி அக்குடிகள் (கிராமக் குடிமக்கள்) கவலைப்பட்டதேயில்லை...ஒரே அச்சில் வார்த்தன போன்றும், மாறாதனவாயும் இருந்த இச்சிறு சமூகங்கள் பெருமளவு அழிந்துவிட்டன; அவை மறைந்து கொண்டிருக்கின்றன. இதற்கு முதன்மையான காரணம் ...ஆங்கிலேயரது நீராவிச் சக்தியும் வர்த்தகச் சுதந்திரமும் ஆற்றிய விளையே தலைமையான காரணமாகும்...இந்த சாதுவான கிராமச் சமுதாயங்கள் கீழ் நாட்டுக் கொடுங்கோன்மைக்குத் திடமான அடிப்படையாக எப்போதும் இருந்து வந்திருப்பதை நாம் மறக்க முடியாது; அவை மானிட மனத்தைக் குன்றிய வட்டத்தில் சுழலச் செய்தன என்பதையும், அதனால் மானிட மனம் மூட நம்பிக்கைக்கு ஏற்ற கருவியாயும், மரபின் அடிமையாயும், தன் மேன்மை முழுவதையும் வரலாற்றுத் திறன்கள் அனைத்தையும் இழந்ததாயும், தேய்வுற்றதையும் நாம் மறப்பதற்கில்லை. பேரரசுகளின் அழிவையும் சொல்வதற்கு முடியாத கொடுமைகள் நிகழ்வதையும், பெரிய நகரங்களின் மக்கள் படுகொலைக்காளானதையும், ஏதோ இயற்கை நிகழ்ச்சிகளைக் காண்பதுபோல் பார்த்துக் கொண்டு வாளாவிருந்த இக்கிராமச் சமூகங்களது தன்னகங்காரத்தை - இவ்வளவுக்கு மிடையில் தத்தம் கையகல நிலத்தின் சாகுபடியிலேயே கண்ணும் கருத்துமாயிருந்த அவற்றின் செருக்கை நாம் மறக்கக்கூடாது. கண்ணியத்துக்கும் முன்னேற்றத்துக்கும் இடமில்லாத இந்த தேக்கமான செயலற்ற வாழ்க்கை, நேர்மாறான விளைவுகளுக்கும் காரணமானது என்பதை நாம் மறக்கக்கூடாது. இந்த சிறு சமூகங்கள் சாதி வேற்றுமையாலும், அடிமை முறையாலும் கெட்டிருந்தன என்பதையும், அவை தானே வளர்வதற்குரிய சமுதாய நிலையை என்றும் மாறாத இயற்கை விதியாக மாற்றின என்பதையும், இவ்வாறாக இயற்கையை வழிபடும் இழிந்த நிலையை உண்டாக்கின என்பதையும், இயற்கையின் அதிபனான மனிதன் குரங்காகிய அனுமனையும், பசுவாகிய சபலையையும் வணங்கி வழிபடச் செய்ததில் இந்த சிறுமையைக் காண்கின்றோம் என்பதையும் நாம் மறக்க முடியாது.''

அகச் சான்றாக பெர்னார் தன் தெ சேன்பியேர் (1790) எழுதிய 'இந்தியக் குடிசை' என்னும் குறுநாவலில் இந்தியத்தின் மூட நம்பிக்கை, போலித்தனம், பொய்மை புரட்டுகள், சாதி, சதி (கைம்மை), கையூட்டு ஆகியக் கொடுமைகளைப் படம் பிடித்துக் காட்டுவதைக் காட்டலாம். இந்நாட்டின் பக்தியைச் சுட்டும் நூலாசிரியர் "ஆண்டவனின் திருத்தேரில் தம் உடலைக் கொக்கியிட்டு மாட்டிக் கொள்வதாகவும், அவன் தேரடியில்படுத்து நசுங்குவதாகவும் கொடிய உறுதி மொழிகளைக் கூறிக் கொண்டே ஆழ்ந்து நெட்டுயிர்ப்பெறியும்சமய வெறியர்களின் காட்சி'' என்கின்றார். சூழ்ந்த புகழில் வாழ்ந்து நாட்டைப் பாழாக்கும் உயர்குலத்தவரைவிட, சூழ்ந்த இருளில் வாழ்ந்து நாட்டை வாழ்விக்கும் தாழ்த்தப்பட்டவன் (என சொல்லப்படுகின்றவர்கள்) உயர்ந்தவன் என்பதை கதையின் தலைவனான 'பறையன்' வாயிலாக "இந்தியனாயிருக்க இயலாதவனாய், என்னை யான் மனிதனுக்கிக் கொண்டேன்'' என்று அறைந்து மொழிகின்றார். பூதேவர்கள் — அந்தணர்கள் — உயர்ந்த குலத்தவர் என புரட்டு வாழ்வு நடத்துவோரை தலைமை அந்தணர் உருவில் காட்டி அவரைச் சித்தரிக்கும் ஆசிரியர் "அவர் தம் தெய்வச் சிலையைக் காட்டிலும், சிந்திப்பதாயில்லை; ஆயினும் இறைவனைப் போன்று தம்மை வணங்குமாறு செய்து கொள்ளுகிறார்'' என்று எள்ளுகின்றார். 'சமயம்' என்பது இந்தியாவில் உழைக்கும் மனிதனை அருவெருப்புக் குரியவனாக்கி விட்டதையும், 'இழிந்தவர்கள்'-தாழ்ந்தவர்கள்' என இழிவுத் தளைகளை உழைஞர்களுக்குப் பட்டும் சிலர் பெருமை என்னும் பிணியால் பீடிக்கப்பட்டிருப்பதையும், 'சதி' (உடன்கட்டை யேறுதல்) என்ற கொடுமையைச் சொல்ல வந்த நூலாசிரியர் "அருவெருப்பின்றி சொல்ல முடியாத கொடிய மதக் கோட்பாடுகளின் தொடர்பாக அவர்கள் தங்கள் உறவினப் பெண்பாலர்களை, தாய்மார்களை, உடன்பிறந்த பெண்களை, புதல்வியர்களைக்கூட உயிருடன் எரிக்கின்றார்கள்'' என்று வெறுக்கின்றார். பல நூற்றாண்டுகளாக இந்த அழகியத் திருநாட்டைப் பாழாக்கி வருகின்ற உட்சண்டை, வெளிச்சண்டைகளின் கேடுகளில் பெரும்பாலான "அந்தணர்களைச் சார்கின்றன'' என்று பொய்யான இறைநெறியையும், இந்தியத்தின் தீமைகளின் மையங்களைச் சுட்டிக் காட்டுகின்றார். இங்கு நிலவும் "மிகக் கொடுமை அவர்கள் (இந்தியர்கள்) மனிதத் தன்மையற்ற அவர்கள் மதத்திற்கு அவர்களே பலியாவதாகும்'' என்ற உண்மையை வெளிக்காட்டுகின்றார். இறுதியாக இந்தியத்தின் ஆன்மாவும், உயிர்த் துடிப்பும், உண்மையும், நேர்மையும் இந்திய நாட்டு அழுத்தப்பட்ட மக்களிடையே தான் உள்ள தென்பதைக் காட்ட வந்த இந்த நல்லறிஞர் "எங்காலும் தவற்றையும், பிணக்கையும் பார்த்தேன். உண்மையையும் இன்பத்தையும் உன் (பறையனின்) குடிசையிலேதான் கண்டேன்;'' என்கின்றார்.

காலத்தால் முந்திய இச்சான்றுக்களோடு மிக அண்மைக்கால சான்றுகளும் உள்ளன. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் வறுமைக்குக் கட்டியங் கூற வந்த குனார்மீர்டால் (1967) பொதுவாக தென்கிழக்கு ஆசிய சமுதாயங்கள் 'இயங்கா சமுதாய நிலையை' பிரதிபலிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்து இயத்தின் (Hinduism) நேரடியான விளைவு: இந்தியாவின் பெரும் பகுதிகளில் சமுதாயத்தை இயங்காத் தன்மைக்கு ஆளாக்கி உள்ள நிலையாகும் (ஞ்ஃஃசேக்ஃஃகோபி, 1971).

மேலே கூறப்பட்ட புறச் சான்றும், அண்மை காலச் சான்றுகளும் அகச் சான்றும் இந்திய சமுதாயத்தைப் பற்றிய (இக்) கட்டுரையாசிரியரின் மதிப்பீட்டை உறுதிப்படுத்தி நிலவுகின்றன. இந்த மதிப்பீட்டை பின்னணியாககொண்டே இந்திய விடுதலைப் போரையும், விடுதலை வீரர்களையும், அவர்களிடமிருந்து வேறுபட்டஅணியில்நின்ற பலரில் ஒருவரான அறிஞர் அண்ணா அவர்களையும் காண்பது முறையாகும்.

[அடுத்த இதழில் முடியும்]

# ஆற்றுப் பாலம்

தூரத்தில் வரும்போதே, ஆற்றுப் பாலத்தருகே காற்றில் முந்தானை படபடக்க நின்றிருந்தவளை இனம் கண்டுகொண்டான் குலசேகரன். ஆற்றுப் பாலத்தின் மேல் நின்றுகொண் டிருந்த திலகவதியும் குலசேகரனைக் கண்டு கொண்டதைக் கையசைப்பின் மூலம் வெளிப் படுத்தினாள்.

ஆற்றுப் பாலத்துக்குக் கீழே துள்ளி ஓடிக்கொண்டிருந்த ஆற்றையும்விட அதி உற்சாகத்துடன் குதித்தது குலசேகரனின் உள்ளம். திலகவதியின் உள்ளமுந்தான்! என்றாலும் சில உணர்வுகளை வெளிக்காட்ட முடிவதில்லையே!

குலசேகரன் திலகவதியைநெருங்கியதும் கேட்டான்: "எங்கே திலகம், ஏது இப்படி......?"

"சும்மாதான்!"

இடைவெளி குறுகினாலும், பேச்சின் இடைவெளி நீண்டது. மௌனம் இருவரையும் என்னென்னவோ செய்து, சிந்தனைத் தேரில் அவர்களை எங்கெங்கோ இழுத்துச் சென்றது.

பி.ஏ., பட்டதாரிதான் என்றாலும் திலகவதியின் மூக்கில் மின்னிய அந்த மூக்குத்தி......அடடா! மூக்குத்தியால் முகத்துக்குப் பொலிவா? இல்லை, முகத்தால் மூக்குத்திக்குப் பொலிவா? விடை காணத் தெரியாமல் விழித்தான் குலசேகரன்.

அவள் கேட்டாள்: "எங்கே, குப்பத்துக்குப் போயிட்டு வர்றீங்களாக்கும்?"

"ஆமாம்; உங்க அப்பாவின் நிலத்தில் வேலை செய்தே ஓடாய்த் தேஞ்சு போனானே வீரமணி. அவனோட பிள்ளைக்கு உடம்பு சரியில்லையாம். பக்கத்து டவுனுக்கு அவனை அழைச்சிகிட்டுப் போய் வைத்தியம் பார்த்துக்கச் சொல்லிட்டு..."

இதுவரை ஆற்று நீரோட்டத்தைப் பார்த்துக்கொண்டே பேசியவன், திலகவதியின் முகத்தைப் பார்த்ததும் நிறுத்திவிட்டான்.

"அப்புறம்...? அப்பாவைப் பற்றித்தான் தெரியுமே!"

அவள் வாயைச் சுழித்துப்பேசிய விதம், அந்தக்குரலின் இனிமைக்கு மேலும் மெருகூட்டிய அவனின் கண்ணோக்கு........ ஓ! இந்த ஒரு கடைக்கண் பார்வைக்கும், இள நகைக்கும் ஈரேழு உலகமும்தான் ஈடாகுமோ?

— "இளவரசி" —

காற்றின் சனலத்தால் அவளுடைய புடவை வேகமாய்ப் படபடத்து அவனுடைய முகத்தில் வந்து அடித்தது.

அவனுடைய உள்ளம் படபடப்பதைவிடவா இது?

"ஏன் திலகம்.........உன் அப்பா என்னைப்பற்றி ஏதாவது?......"

"எல்லாம் எப்போதும் போலத்தான் சேகர், 'ஒரு எம்.ஏ. பட்டதாரி சமூக சேவை என்று சொல்லிக்கிட்டு கிராமத்தை சுத்தி வந்து என்னைப்போல பெரிய மனுஷனையெல்லாம் பகைச்சுக்கறானே. நான் நெனச்சால்இவனுக்கு நல்லவொரு இடத்திலே சொல்லி வேலை வாங்கிக் கொடுத்துடுவேன்.........உம், நடக்கிற காரியமா அது?' என்கிறார் அப்பா."

"அதுதான் தெரிந்த விஷயமாச்சே திலகம். நான் அதைக் கேட்கலை...நம்ம ரெண்டுபேரைப் பற்றி..."

"அதுவா? அந்தப்பேச்சை எடுத்தாலே, 'உன்னைக் கண்ட துண்டமா வெட்டிப் போட்டாலும் போடுவேனே தவிர சாதி விட்டு சாதி போய் அவனுக்குக் கொடுப்பேனா?' என்று எரிந்து விழுகிறார்."

"உம்...!"

இந்த சாதி என்ற ஒன்றல்லவோ இரு மனங்களின் சங்கமத்துக்கு இடையூறாய் நின்று ஏளனம் புரிகிறது!

"இருட்டி விட்டதே, வரட்டுமா?"

"உம்..."

அவள் விடை பெற்றுப் பிரிந்தாள்.

தூரத்திலிருந்து 'முத்துக்களோ கண்கள்...' திரைப் படப் பாட்டு காற்றில் மிதந்து வந்தது. அவன் மனத்தைக் கவர்ந்த பாடல் அது.

மெய்மறந்து அவன் நின்ற சமயம். நெஞ்சிருக்கும் வரை விஜயாவைப் போலவே அவளும் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டு நடந்தாள்.

'ஓ, எனக்கு அந்தப் பாக்கியம் கிடைக்குமா?'

விடை கொடுத்த கைகள் ஏக்கத்தில் மெல்ல அசைந்தன.

* * *

அதற்குப் பிறகு ஒரு மாதமாகவே திலகவதியை ஆற்றுப் பாலத்தில்கூடச் சந்திக்க முடியவில்லை குலசேகரனுக்கு.

'மாணவர் சர்வோதய முகாம்' ஒன்று அந்தக் கிராமத்துக்கு வந்தது. கிராமநலத் தொண்டன் குலசேகரனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார், முகாம் நடத்துபவர்.

சோதனையாக அவன் ஆற்றுப் பாலத்துக்குச் சென்று காத்து நிற்கும் போதெல்லாம் திலகவதியைக் காண முடிவதில்லை.

சிறுகதை!

அதனுலென்ன? கடந்த காலத்து இனிமைக் காதல் நினைவுகள் எதற்காக இருக்கின்றன? நடைமுறைச் சோக நிழலில் அமர்ந்தாலும், நிம்மதியை நெஞ்சுக்கு ஊட்டும் உணர்வுகளாக மலரத்தானே நினைவென்னும் மொட்டுக்கள் காத்துக் கிடக்கின்றன! நினைவின் மகிழ்வில் பிரிவை மறந்தான் குலசேகரன்.

பெண்ணைத் தந்திரமாகத் தன் தங்கை ஊருக்கு அனுப்பிவிட்டிருந்தார் திலகவதியின் தந்தை கிருஷ்ணசாமி என்பது கொஞ்ச நாட்கள் கழித்தே தெரியவந்தது குலசேகரனுக்கு.

காலதேவன் தன் போக்கில் நடை போட்டுக்கொண்டு போனுன். குலசேகரனும் திலகவதியின் பிரிவால் ஏற்பட்ட இழப்பையும் தன் சேவையில் மறக்கடிக்க முழுநேரமும் சேவையிலேயே மூழ்கினுன்.

குப்பமும் சேரியும் எளிமையாக ஆனுல் சுகாதாரமாக மாற்றி அமைக்கப்பட்டது. துத்தனஞ்சேரி காந்தி நகராக மாறியது. விவசாயிகள் மனமகிழ் மன்றம் ஏற்படுத்தப் பட்டது. பண்ட மாற்று சாலை... இன்னும் என்னென்னவோ ...... காந்தி கண்ட கிராம ராஜ்யமே இதுதானே என்றெண்ணும் அளவுக்கு துத்தனஞ்சேரி வளர்ந்து விட்டது.

இவ்வளவு முன்னேற்றத்துக்கும் காரணமான குலசேகரனைக் கிராமத்தில் எல்லோரும் பாராட்டினர், ஒரு சிலரைத் தவிர, அந்த ஒரு சிலர் கிருஷ்ணசாமி, கணக்கப்பிள்ளை கேசவன், மணியகாரர் மாதவன் போன்றவர்கள்தான்.

"அவன் கிடக்கிறுன் கிறுக்குப் பயல்!"

இதுதான் அவர்கள் அவனுக்குக் கொடுத்த பட்டம்.

காரணம், அவர்களைவிட 'கீழ் சாதி' என்று சமூகம்-என்று சொல்லிக்கொண்ட—மேட்டுக் குடிகளால் கணிக்கப்பட்டவன்!

அதுமட்டுமல்ல, அவன் தன்னிலும் 'கீழ்சாதி'கள் வருகின்ற சேரியின் நன்மைக்குப் பாடு படுகிறவன்!

உழைத்து உழைத்து மற்றவர்க்கு உணவளிப்பதற்கென்றே பிறந்த மனித உருவிலிருக்கும் எந்திரங்களுக்குக் கல்வி யறிவைப் புகட்டத் துணிவதாலேயே அவன் அசடன்!

குரைக்கும் நாயினைக் கண்டு கதிரவன் தன் பணியை நிறுத்துவதில்லையே! குலசேகரனும் தன் சேவையை நிறுத்தாமல் தொடர்ந்தான்.

என்ருலும் இடை இடையே அவனுள் எழும் ஓர் ஏக்க உணர்வு.

நினைவுகளின் பின்னலில் காலம் சுழன்றது.

ஃ ஃ ஃ

ஆற்றுப் பாலத்தில் திலகவதியைக் குலசேகரன்சந்தித்து ஓராண்டுக்கு மேலிருக்கும்,

ஒரு நாள்.

கால் போன போக்கில் போய்க் கொண்டிருந்தகுலசேகரன் அவனை அறியாமலேயே விவசாயி வீரமணியின் குடிசை வாசலையடைந்தான்.

'அம்மா ... அப்பா...'

முனகல் ஒலி குடிசைக்குள்ளிருந்து வந்தது.

"யாரு, வீரமணியா?"

"ஆ.......மா......முங்க......சேகர் ஐயாவா, வாங்க!"

குலசேகரன் குடிசைக்குள் நுழைந்தான்.

அங்கே—

வலது காலில் போடப்பட்ட கட்டுடன், குடிசையைத் தாங்கிக் கொண்டிருந்த மூங்கில் கால்களுள் ஒன்றில் தலையைச் சாய்த்தவாறு படுத்திருந்தான் வீரமணி.

"என்ன வீரமணி, இது?"

"ஒண்ணுமில்லீங்க ...... ஆற்றங் கரைப் பக்கமாப் போயிட்டிருந்தப்போ கால் வழுக்கி விழுந்துட்டேனுங்க!"

"அடப் பாவமே, இப்போ எப்படி இருக்கு?"

"இப்போ ... ஆ ... கொஞ்சம்... உம்...தேவலாமுங்க!"

"ஏன் வீரமணி, பொய் சொல்றே? ஆற்றங்கரையில் வழுக்கி விழுந்த காயமா இது? நீ என்னத்தையோ எங்கிட்டே மறைக்கிறே!"

"ஒண்ணுமில்லீங்க...வந்து..."

"சும்மா சொல்லு, வீரமணி."

"உடம்பு சரியில்லையேன்னுட்டு நான் வேலைக்குப் போகாமே, என் மவன் வெற்றிமணியை வயலுக்கு அனுப்பிச்சேனுங்க ... பெரியவரு வந்து..."

"யாரு, கிருஷ்ணசாமி அய்யரா?"

"ஆமாமுங்க ... மவனை வயலில் இறங்கக் கூடாதுன்னு சொல்லிட்டாராம். இறங்கினு காலை வெட்டிப்பிடுவேன்னு சொன்னுராம்... பையன் திரும்பி வந்துட்டானுங்க. ஒடம்பு சொகமில்லேன்னுலும் சரின்னுட்டு அவருகிட்டே நேரிலே சொல்லப் போனேனுங்க ...... எதிர்த்தாப்போல ஆற்றுப் பாலத்துக்கிட்டே அய்யரு வந்துக்கிட்டிருந்தாருங்க. அப்போ வீசின காத்துல அவரோட மேல்துண்டு பறந்து ஆற்றுப்பக்கம் போகவே இவரு தாவிப் பிடிக்கப் பாய்ஞ்சாருங்க. கால் தவறி ஆத்துல விழுந்துட்டாருங்க. அவருக்கு நீச்சலும் தெரியாதுங்களா? நான் உடனே ஆத்துலே குதிச்சேனுங்க. ஏதோவொரு பாறையிலே வலதுகால் அடிபட்டுப் போச்சுங்க. அப்போ அதொன்னும் தெரியலீங்க. அய்யரை இழுத்துக்கிட்டு வந்து கரையிலே போட்டுட்டு நானும் விழுந்தேனுங்க. அவரை அழைச்சிக்கிட்டு டவுன் ஆசுபத்திரிக்குப் போயிருக்காங்க...நான் ஏழைதானுங்களே;"

---

## காஞ்சி மணிமொழியார்

# மறைவு

பெரியாரின் சுயமரியாதைத் தொண்டர்களில் ஒருவரும் தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர்களில் ஒருவருமான, கழகப் பெரியவர் மறைவு நமக்கெல்லாம், தமிழ் நெஞ்சங்களுக்கெல்லாம் ஈடு செய்ய முடியாத ஓர் இழப்பு. அன்னுரது குடும்பத்தினர்க்கும், உறவினர்களுக்கும் அண்ணுவின் குடும்ப சார்பாகவும், "காஞ்சியின்" சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிருேம்.

—ஆசிரியர்.

"காஞ்சி"

"அப்படியெல்லாம் சொல்லாதே, வீரமணி. சீக்கிரமே உனக்குக் குணமாயிடும். நான் அதுக்கு ஆகவேண்டியதைக் கவனிக்கிறேன்..." என்றவாறே குலசேகரன் வீரமணியின் கால்களை மெல்ல வருடிக் கொடுத்தான்.

"எசமான்! என்ன காரியம் செய்றீங்க? என்னுடைய காலைப் போய்..." துடித்தெழுந்து அமர்ந்தான் வீரமணி.

"ஏன் வீரமணி, உன் கால்களை நான் தொட்டாலென்ன? காந்தி என்ன சொல்லியிருக்காரு தெரியுமா? 'மற்றவர்களின் உணவுக்காக எந்தத் திருவடி சேற்றை மிதித்துக் கொண்டிருக்கிறதோ அந்தத் திருவடிதான் இறைவனின் திருவடியைத் தீண்ட நான் எத்துணை புண்ணியம் செய்திருக்க வேண்டும்?"

"அந்த இறைவனின் குடிலில் இந்த பக்தைக்கும் இடமுண்டோ?" என்று இனிமைக் குரலொன்று கேட்டதும் திரும்பிப் பார்த்தான்.

வாயிலில்—

திலகவதிதான் நின்றிருந்தாள்.

அவளின் கழுத்தில் மஞ்சள் வண்ணக் குட்டை ஒன்று!

வியப்பினைக் கண்கள் உதிர்க்க திலகவதியை நேரிட்டுப் பார்த்தான் குலசேகரன்.

"என்ன திலகா, இது?"

"நான் சாந்தி சேனையில் சேர்ந்து விட்டேன், சேகர்."

"அமைதிப் படையில் சேர உன் அப்பா எப்படிச் சம்மதித்தார்?"

"இதுக்கு மட்டுமில்லே சேகர். அவர் வேறொன்றுக்கும் சம்மதிச்சிருக்கார்..."

"என்னது?"

"நான் சொல்ல மாட்டேன்!"

நாணித் தலை குனிந்தாள் நங்கை.

நங்கையின் குழைவு கண்டு மனங் குழைந்தான் நாயகன்.

"இந்த அதிசயம் எப்படி நிகழ்ந்தது திலகா?"

"எல்லாம், இந்த வீரமணியால் தான்!"

"அப்படியா?"

"ஆமாம்; வீரமணியால்தான் ஆற்றில் விழுந்த தன்னை உடல் நிலையையும் பாராமல் குதித்துக் காப்பாற்றிய வீரமணியால்தான் அவரின் கண்கள் திறந்திருக்கின்றன! தீண்டத் தகாதவன் என்று விலக்கி ஒதுங்கும் தன்னை, அதே தீண்டாதவன் தீண்டாமல் விட்டிருந்தால் ஆற்று வெள்ளம் உயிரைக் குடித்திருக்குமே என்று அடிக்கடி உணர்ந்து சிந்தித்திருக்கிறார். உயிருக்கு ஆபத்தைக் கொடுத்துக் காட்டித்தான் இயற்கை அவருடைய கண்ணைத் திறக்க வேண்டியிருந்திருக்கிறது!"

"ஒரு கிருஷ்ணசாமியை உணர வைக்க ஒரு வீர மணியும் ஓராறும் தேவை; சாதி வேறுபாடு பாராட்டும் எண்ணிலடங்கா கிருஷ்ண சாமிகளைத் திருத்த எத்தனை வீர மணிகள், எத்தனை ஆறுகள் தேவை!" குலசேகரன் கணக்கெடுத்துப் பார்க்கலானான்.

★

வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்-நெசவோ நெஞ்சையள்ளும்

★ குர்தாக்கள்
★ பெல்ட் பாட்டம்கள்
★ லுங்கிகள்
★ சேலைகள்
★ உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற வர்ணஜால ஆடைகள்...
கோ-ஆப்டெக்ஸ் சகாயமான விலை! ஆதாயமான உழைப்பு!

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.
(பாலசுந்தரம் பில்டிங்ஸ்)
எழும்பூர் :: சென்னை - 8.

தங்க. கலியாக, கருக்குப்பேட்டை

**தமிழில் கவிதை இலக்கியம் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளதா?**

நான்கு எழுத்துக்களை ஒன்று கூட்டத் தெரிந்தவர்கள் கூட, "கவிதை" எழுதும் அளவுக்கு கவிதை இலக்கியம், தமிழில் வளர்ந்திருக்கத் தான் செய்கிறது!

ஃ ஃ ஃ

எஸ். மோகன் பி. எஸ். சி., கோவில்பட்டி

**அண்ணாவுக்குப் பிறகு கழகம் எப்படி இருக்கிறது?**

கலகலத்துப் போயிருக்கிறது என்று கூறமுடியாது; கட்டிக் காப்பாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது!

ஃ ஃ ஃ

**சிண்டிகேட் காங்கிரசின் எதிர்காலம் எப்படி இருக்கும்?**

நான்கு பேர் கூடி அமர்ந்து மாரடித்து அழவேண்டிய நிலையில் இருப்பதாக இருக்கும்!

ஃ ஃ ஃ

மா. சம்பத், சுப்பிரமணியபுரம்

**எம். ஜி ஆர். அவர்கள் அகில இந்திய சிறந்த நடிகராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது பற்றி சில அறைகுறைகள் உளறிக்கொண்டு இருக்கின்றனவே. அவைகளுக்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?**

அறிவுரைகள் இப்போது அந்த அறை குறைகளுக்குத் தேவையில்லை. அந்த அரை வேக்காட்டுக் கும்பலின் காட்டுக் கூச்சல்களை யெல்லாம் செவி மடுத்து, இதயத்தை வருத்திக் கொள்ளாமலிருக்க வேண்டும் என்ற அறிவுரை, அகில இந்திய சிறந்த நடிகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது குறித்து மகிழ்ச்சியடையும் கழகத் தோழர்களுக்குத்தான் தேவை!

ஃ ஃ ஃ

கே. பெரியநாயகம், சத்திரிப்புலம்

**இராவணனுடைய உடல், 'ஓர் மலையின் உச்சியில் இருப்பதாக, இலங்கை சாமியார் ஒருவர் கூறுகிறார். இது உண்மையா?**

ஐயோ. பாவம்! அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய், நீக்கமற நிறைந்திருக்கும் எம்பிரானும் சிவனார், தம்பதி சமேதராக இமய உச்சியில் இடம் பெற்றிருப்பதாகக் கூறுகிறார்களே, அது உண்மையா என்று கேட்காமல் விட்டீர்களே!

கரு. அரங்கநாதன் மன்னார்குடி

**சென்ற திங்களில் மன்னார்குடியில் கழகம் நடத்திய மாநாட்டிலும், அதற்கடுத்த கிழமை கம்யூனிஸ்டுகள் நடத்திய மாநாட்டிலும் நான் கலந்துகொண்டேன். ஆனால் சென்ற இதழ் ஜனசக்தியில் தாங்கள் நடத்திய மாநாடுதான் பிரமாண்டமானது; வெற்றியடைந்தது என்று எழுதிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

கம்யூனிஸ்டு நண்பர்களுக்கு எப்போதும், எதையும் மிகைப்படக் காண்பதும், உணர்வதும் வாடிக்கை ஐயா! தாங்களே வெற்றியடைந்ததாகக் கூறிக்கொள்ளக்கூடக் கூடாது என்று நினைக்கிறீர்களா நீங்கள்! அந்த ஆத்ம திருப்தியையாவது அவர்களுக்குக் கொடுங்களேன்!

ஃ ஃ ஃ

**மாநில சுயாட்சியை கம்யூனிஸ்டுக் கட்சி வெறுக்கிறதா? மறுக்கிறதா?**

இரண்டும் இல்லை. கழகம் சொல்லும் "சுயாட்சி" என்ற சொல்லைத்தான் வெறுக்கிறதாம்; மறுக்கிறதாம்!

ஃ ஃ ஃ

து. குமாரசாமி, சேலம்

**ஜனசங்கம் மட்டும், இந்திய முஸ்லிம்களின்மீது எரிந்து விழுந்து கொண்டிருப்பது எதனால்?**

ஜனசங்கம் மட்டும்தான், இந்து சாம்ராஜ்யத்தை இந்த நாட்டில் நிலைநாட்டப் போகிறது என்று கூறிக்கொண்டு வருகிறதல்லவா—அதனால்!

# ?! வினா-விடை

கே. இராதாகிருஷ்ணன், சென்னை-17

**நாடாளும் மன்ற அவைக்கூடத்தில் புகை பிடிக்கும் அனுமதி வேண்டும் என்று கேட்டிருக்கிறார்களே சில எம். பி. - க்கள்! இது குறித்துத் தங்கள் கருத்தென்ன?**

இந்த அனுமதியை மட்டும் கேட்டார்களே என்று மகிழ்ச்சியடையவேண்டும்; நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்றால் எல்லா உரிமையும் உள்ளவர்கள். அதனால் குடிப்பதற்கும், படுப்பதற்கும்கூட அவர்களுக்கு உரிமையுண்டு. அதை சபையிலேயே நிறைவேற்றிக்கொள்ள அனுமதி தாருங்கள் எனக் கேட்காமல் விட்டார்களே — நன்றி சொல்ல வேண்டாமா அவர்களுக்கு!

ஃ ஃ ஃ

ஒய். பி. தனசேகரன், கோவை

**மோகன் குமாரமங்கலத்தின் அமைச்சர் பதவி காப்பாற்றிக் கொள்ளப்படுமா?**

காப்பாற்றிக் கொள்ளப் பட வேண்டும்—என்று பிரார்த்தனை செய்து கொள்வோமாக!

ஃ ஃ ஃ

**சுப்பிரமணியம் சூடு குறைந்து காணப்படுவதில் மர்மம் ஏதாவது இருக்கிறதா?**

அவர் தமிழ் நாட்டுக்கு வரும் போது மட்டும்தான் இரத்தக் கொதிப்புக்கு ஆட்பட்டுப் போவதாக அவரை அறிந்தவர்கள் கூறுகிறார்கள்

ஃ ஃ ஃ

எம். ஜலாலுதீன், அரக்கோணம்

**போராட்டங்கள் எந்த அடிப்படையில் விளம்பரப்படுத்தப் படுகின்றன?**

பதில் உங்கள் வினாவிலேயே இருக்கிறதே!— விளம்பர அடிப்படையில் என்று!!

ஃ ஃ ஃ

**தமிழ் நாட்டில் இப்போது ஏதேனும் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா?**

இப்படி ஒரு கேள்வியைக் கேட்கும் அளவுக்குப் போதிய விளம்பரம் இல்லாத போராட்டங்கள் சில இந்திரா காங்கிரசினாலும், காமராஜ் காங்கிரசினாலும் நடத்தப்பட்டுக் கொண்டுதானிருக்கின்றன — "மின் கட்டணக் குறைப்பு" என்ற பெயரில்!

★

# தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு வாங்குவீர்

## நன்மையை நோக்கித் திரும்புவீர்

சைக்கிள் சக்கரம் சுழல்வது போல் அன்னார் வாழ்க்கையிலும் ஏன்
ஓர் மகிழ்ச்சிகரமான திருப்பம் ஏற்படக்கூடாது?
தமிழ்நாடு பரிசுச் சீட்டின் மூலம் அவர் ரூபாய் ஒரு லட்சம் பரிசு பெறக்கூடும்.

மொத்தப் பரிசுத் தொகை *

ரூ. 10,50,000

மொத்த பரிசுகள் 3198

முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய்
(ஒவ்வொரு வரிசைக்கும்)

குலுக்கல் நாள்: 30-6-1972

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை: ரூ. 1/- தான்

தமிழ்நாடு பரிசுச் சீட்டு இது வரை
287 லட்சாதிபதிகளை உருவாக்கியுள்ளது!

அடுத்து தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2.
விளம்பர வெளியீடு. இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-9

*3 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது




ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-2
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.